2010 ஏப்ரல் 8]

உறுப்பினர் அவர்கள், பாலம் கட்டுவதற்கு முன்பே அந்தச் சாலைகளை அகலப்படுத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். பாலம் கட்டப்படுவதால்தான் அந்தப் பகுதியிலே போக்குவரத்து அதிகமாக வாய்ப்புள்ளது. எனவே, அது பெரிய பாலமாக இருப்பதனால் ஏறத்தாழ கட்டுமானப் பணிக்கு மட்டும் 18 மாதகாலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதற்குள், அந்தச் சாலையை உடனடியாக அகலப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார். குறைந்தபட்சம் ஓராண்டு காலம் ஆகும், எவ்வளவு வேகமாகக் கட்டினாலும். எனவே, அந்தப் பாலம் அமைகிறபட்சத்திலேதான் போக்குவரத்து அதிகமாகும் வாய்ப்புள்ளது எனவே, அதற்கேற்ப அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 39, வினா வரிசை எண் 40 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் 5–4–2010 அன்று தெரிவித்த ஆதாரமற்ற குற்றச்சாட்டு குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள், அவைக்கு ஆதாரம் இல்லாமல் ஒரு தவறான தகவல் அளித்தது குறித்து இன்று எனது தீர்ப்பினை வழங்குவதாக நேற்றையதினம் தெரிவித்திருந்தேன். இப்பொழுது எனது தீர்ப்பை வழங்குகின்றேன்.

கடந்த 5–4–2010 ஆம் நாள் (திங்கட்கிழமை) சட்டப் பேரவையில் நடைபெற்ற வினா—விடை நேரத்தில் கும்மிடிப்பூண்டி சட்டப் பேரவைத் தொகுதி அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள், திருவள்ளூர் மாவட்டம், சித்தராஜ கண்டிகை கிராமத்தில் உள்ள அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலில் திருப்பணிகள் துவங்கவில்லை என்று குறிப்பிட்டார். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்

துறை அமைச்சர் அவர்கள் 75% திருப்பணிகள் முடிவுற்றதாகத் தெரிவித்த பிறகும், தனது கருத்தினைத் திரும்பவும் வலியுறுத்தி இதுவரை அங்கு திருப்பணிகளே நடைபெறவில்லை என மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்தார்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், இதுகுறித்து சம்பந்தப்பட்ட உறுப்பினர் விருப்பப்பட்டால் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடன் நேரில் சென்று பார்வையிடலாமெனத் தெரிவித்தார்கள். ஆனால், உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் நேரில் சென்று பார்வையிடுவதற்குத் தனது விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை. இருந்தபோதிலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோயிலின் திருப்பணிகளை நேரில் சென்று பார்வையிட்டதுடன், திருக்கோயிலில் திருப்பணிகள் தங்குதடையின்றி நடைபெற்று வருவது குறித்து சம்பந்தப்பட்ட புகைப்படங்களையும் எனது பார்வைக்குச் சமர்ப்பித்தார். இதுகுறித்து 7—4—2010 அன்று மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள், தான் 5—4—2010 அன்று அவையில் தெரிவித்த கருத்து தவறானது என்றோ, அல்லது தனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நான் தெரிவித்தேன் என்றோ கூறவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெருந்தன்மையுடன், உறுப்பினர் தெரிவித்த தவறான செய்தியைத் திருத்திக்கொள்ளும் வகையில், திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள் இப்பொழுதாவது தான் தெரிவித்த கருத்து தவறானது என வருத்தம் தெரிவித்திருப்பாரேயானால், இப்பிரச்சினையை அமைச்சரின் விளக்கத்தோடு முடித்துவிடலாம் என்று அவையில் தெரிவித்த பிறகும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ளாமல், பண்பாடற்ற முறையில், அரசியல் நாகரிகமற்ற முறையில், அதனை நிராகரித்து, தான் தெரிவித்த தவறான தகவலை, அவையைத் திசை திருப்பும் வகையில் வேண்டுமென்றே பதிய வைத்துள்ளார் எனக் கருத வேண்டியுள்ளது.

முற்பகல் 10—50

பேரவையின் உறுப்பினர்கள் பேசும்பொழுதும், குற்றச்சாட்டுகள் தெரிவிக்கும்பொழுதும், அதற்குரிய ஆதாரத்தினை என்னிடம் அளித்துவிட்டுத்தான் பேசவேண்டும். ஆனால், அ.இ.அ.தி.மு.க.

உறுப்பினர் எந்தவித ஆதாரமுமின்றி ஒரு குற்றச்சாட்டினை அவையைத் திசை திருப்பும் வகையில் தெரிவித்ததோடு மட்டுமின்றி, அது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுப்பினருக்கு தவறைத் திருத்திக்கொள்ள ஒரு வாய்ப்பு அளித்தபொழுதும், அதனைப் பயன்படுத்திக்கொள்ளாமல், தனது தவறினை ஏற்றுக்கொள்கின்ற மனப்பான்மை பெறாமல், வேண்டுமென்றே அவையைத் திசை திருப்பும் நோக்கத்தோடு செயல்பட்டுள்ளார். இதுபோன்று, ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகள் உறுப்பினர்களால் அவையில் தெரிவிக்கப்படுவது, அவை மரபுக்கு உகந்தது அல்ல என்பதாலும், அது அவையை அவமதிப்பதாகக் கருதுவதாலும், எதிர்காலத்தில் உறுப்பினர்களுக்கு ஒரு பாடமாக அமையும் வகையில், திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்களை ஒரு நாள், அதாவது 12—4—2010 அன்று மட்டும் பேரவைப் பணிகளில் இருந்து நீக்கி வைப்பது உகந்ததாக இருக்கும் எனக் கருதுகிறேன். எனவே, இதுகுறித்த தீர்மானத்தைப் பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வரலாம்.

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் 12-4-2010 அன்று ஒரு நாள் பேரவைப் பணிகளினின்று நீக்கிவைக்கப்பெறுதல்

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“கும்மிடிப்பூண்டி சட்டப் பேரவைத் தொகுதி அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள் 5—4—2010 அன்று அவையில் திருவள்ளூர் மாவட்டம், அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் திருப்பணிகள் குறித்து ஒரு தவறான தகவலை எவ்வித ஆதாரமும் இன்றி அவையில் தெரிவித்தார். இதனை மறுத்து, அதற்குரிய புகைப்பட ஆதாரங்களுடன் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்த பிறகும், அவர் ஏற்றுக்கொள்ளாது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த வாய்ப்பினையும் பயன்படுத்திக்கொள்ளாமல், தனது தவறினை ஏற்றுக்கொள்கிற மனப்பான்மை பெறாமல், அவையைத் திசை திருப்பும் நோக்கோடு செயல்பட்டுள்ளார். இதுபோன்ற ஆதாரம்